செ.வெ.எண்: 955/2017 நாள்: 10.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு காணாமல் போன மீனவர்கள் பற்றி குளச்சல் கடலோர காவல் நிலையத்தில் புகார் அளிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் வேண்டுகோள்**

கன்னியாகுமரி மாவட்டத்தினை கடந்த 30.11.17-ம் தேதி தாக்கிய "ஓகி" புயலின் காரணமாக பெரும் பொருட்சேதம் மற்றும் உயிர்சேதம் ஏற்பட்டது. மேலும் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் பலரும் காணாமல் போயிருக்கிறார்கள். மேலும் சிலர் இறந்தும் உள்ளனர்.

ராமன்துறை பகுதியைச் சார்ந்த ஜெரின்யாஸ் என்பவர் இறந்தது தொடர்பாக குளச்சல் கடற்கரை காவல் நிலைய குற்ற எண். 39/17 u/s 174 CrPC மற்றும் இரயும்மன்துறையைச் சார்ந்த சூசையா என்பவர் இறந்தது தொடர்பாக கேரள மாநிலம் நீண்டகரை காவல் நிலைய குற்ற எண். 25/17 u/s 174 CrPC ஆக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மீனவர்கள் மரிய சுஜன் தாஸ், பெலிக்ஸ் டென்னிஸ், மார்சல், ஜார்ஜ், ரோஸ்லெட் ஆன்டோ, வர்கீஸ் ராஜன், பணியடிமை, மனோஜ், ஜாண் ஜெலஸ்டின், வில்பர்ட், ஜெஸ்டின்பாபு @ சந்திர ராபின்சன் ஆகியோர் காணாமல் போனது தொடர்பாக அளிக்கப்பட்ட மனுவிற்கு குளச்சல் கடற்கரை காவல் நிலைய குற்ற எண்கள். 36/17, 37/17, 38/17, 40/17, u/s Man missing பிரிவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் இந்திய கடற்படை உதவியுடன் தேடப்பட்டு வருகிறது.

மேலும் இது போன்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக, காணாமல் போன மீனவர்கள் குறித்து அவர்களது உறவினர்கள் (ரத்த சொந்தங்கள்) குளச்சல் கடலோர காவல் நிலையத்தில் உடனடியாக புகார் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**